**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 381/2025**
**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சிவா** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. முருகேசன்** | **Calling** | : | **எலக்ரானிக்ஸ் கடை** |
| **Village** | : | **சேடபட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **35** |
| | | | **Dated** | : | **12.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1, 2 மற்றும் 4 எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 4 (பட்டியல் சாட்சி 4), **திரு. சிவா** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து எலக்ரானிக்ஸ் கடை வைத்து வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. 2010ம் ஆண்டு இரவு 10.00 க்கு நான் பயணம் செய்த பழனி முருகன் பேருந்தில் ஒரு பிரச்சனை ஏற்பட்டது. மேற்படி பேருந்தில் நடத்துநர்களுக்கும், பயணம் செய்தவர்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டு நடத்துநர்களை கத்தியால் குத்தி ஆம்புலன்ஸில் அவர்கள் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர். இது சம்மந்தமாக செம்பட்டி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இது சம்மந்தமாக போலீசார் அப்பொழுது எங்களை இரண்டு நாட்கள் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

பேருந்தில் கூட்டமாக இருந்ததால் யார் யாரைத் தாக்கினார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். யாரோ நான்கு பேர் இறங்கி ஓடியதாகக் கேள்விப்பட்டேன் என்றால் சரிதான்.

**Taken down by me/before me in open court on 12.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.02.12 17:31:21 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 381/2025**
**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சந்திரசேகர்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. ராஜகோபால்** | **Calling** | : | **மளிகைக்கடை** |
| **Village** | : | **சேடபட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **38** |
| | | | **Dated** | : | **12.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1, 2 மற்றும் 4 எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 5 (பட்டியல் சாட்சி 5), **திரு. சந்திரசேகர்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து மளிகைக் கடை வைத்து வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. 2010ம் ஆண்டு நான் திண்டுக்கலில் மோட்டார் கடையில் வேலை செய்து கொண்டு இருந்தேன். எங்கள் ஊருக்கு கடைசிப் பேருந்து இரவு 09.30 மணிக்கு சித்தூர் போகும். மேற்படி நான் பயணம் செய்த பழனி முருகன் பேருந்தில் ஒரு பிரச்சனை ஏற்பட்டது. மேற்படி பேருந்தில் பயணம் செய்தவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு விலக்க சென்ற நடத்துநர்களை கத்தியால் குத்தி உடனே வண்டி செம்பட்டி போலீஸ் ஸ்டேசனுக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கிருந்து ஆம்புலன்ஸில்

காயம்பட்டவர்களை சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர். இது சம்மந்தமாக போலீசார் மறுநாள் எங்களை வரச்சொல்லி விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

பேருந்தில் கூட்டமாக இருந்ததால் யார் யாரைத் தாக்கினார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான்.

Taken down by me/before me in open court on 12.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.02.12 17:31:35 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 381/2025**
**Prosecution Witness : 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. குணசேகரன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. நாராயணன்** | **Calling** | : | **VAO (பணி ஓய்வு)** |
| **Village** | : | **ஆடலூர்** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **73** |
| | | | **Dated** | : | **12.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1, 2 மற்றும் 4 எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 6 (பட்டியல் சாட்சி 10), **திரு. குணசேகரன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். சம்பவ காலத்தில் நான் கிராம நிர்வாக அலுவலராக பணி செய்தேன். ஆஜர் எதிரிகளைத் தெரியவில்லை, 10 ஆண்டுகளுக்கு மேல் ஆனதால் சரியாகத் தெரியவில்லை. செம்பட்டி – திண்டுக்கல் செல்லும் டவுன் பஸ்ஸில் 2010 ம் ஆண்டு நடத்துநர்களுக்கும், பயணிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டது. இரண்டு நடத்துநர்களை கத்தியால் குத்திவிட்டதாக சொன்னார்கள். நடத்துநர்களை கத்தியால் குத்தியதாகச் சொல்லி இந்த எதிரிகள் மூன்று பேரைக் கைது செய்தார்கள். மேற்படி மூன்று பேரையும் காவல் ஆய்வாளர் எங்கள் முன்பாக கொண்டு வந்தார். சங்கர் மற்றும் ராஜா ஆகிய இருவரிடமும் வாக்குமூலம் வாங்கினார்கள். சிவனாண்டி

என்பவர் அந்த சமயத்தில் கிடைக்கவில்லை. பிறகு 02.00 மணிக்கு சிவனாண்டி என்பவரிடம் காவல் நிலையத்தில் வைத்து வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ. 2 முதல் அ.சா.ஆ. 4 வரை குறியீடு செய்யப்படுகின்றன**. மேற்படி எதிரிகள் கத்தியால் குத்தியது சம்மந்தமாக வாக்குமூலம் கொடுத்தார்கள். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **மேற்படி அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி அத்தாட்சியின் அடிப்படையில் ஒரு கத்தியைக் கைப்பற்றினார்கள். மேற்படி என்னிடம் காட்டப்படும் கத்தி அப்போது கைப்பற்றியதுதாள். **மேற்படி கத்தி சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

சம்பவ சமயத்தில் நான் ஆத்தூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். சம்பவம் நடந்த ஆதிலட்சுமிபுரம் எனது அதிகார எல்லைக்கு உட்பட்டது அல்ல என்றால் சரிதான். ஆதிலட்சுமிபுரம் கிராமத்திற்கு நான் பொறுப்பு கிடையாது என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலகத்தில் கிராம பதிவேடு (Village Manual) என்ற பதிவேடு இருக்கும் என்றால் சரிதான். அதில் நான் வெளியே செல்லும் போது நான் எங்கு போகிறேன் என்ற விபரத்தினை எழுதி வைத்துவிட்டு செல்லுவோம் என்றால் சரிதான், நோட்டீஸ் போர்டில் எழுதுவோம். அவ்வாறு நான் எழுதிவிட்டு போகவில்லை என்றால் சரிதான். குற்ற வழக்குகளில் சாட்சியாக போகும்போது ஒப்புதல் வாக்குமூலங்களில் மூன்று பிரதிகள்

எடுத்து ஒன்று தாசில்தாருக்கும், ஒன்று நீதிமன்றத்திற்கும், ஒன்று காவல்துறையினருக்கும் கொடுக்கப்படும் என்றால், அப்படி எல்லாம் கொடுக்கவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தை எழுதியது யார் என்று கேட்டால், காவல் ஆய்வாளர் சொல்ல சொல்ல ரைட்டர் எழுதினார். 21.08.2009 ம் தேதி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரிதான். செம்பட்டி காவல் நிலையத்தில் வைத்துத்தான் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். செம்பட்டி காவல் நிலையமானது பச்சைமலையான் கோட்டை கிராம நிர்வாக அலுவலகத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான். சம்பவம் நடந்தது மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கிய இடம் எதுவும் எங்கள் அலுவலகத்திற்கு அந்த சமயத்தில் கட்டுப்பட்டது அல்ல என்றாலும், காவல்துறையினர் கேட்டுக் கொண்டதன் பேரில் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரிதான்.

Taken down by me/before me in open court on 12.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.02.12 17:31:47 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 381/2025**

**Prosecution Witness : 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. மகேந்திரன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பெரியசாமி** | **Calling** | : | **விவசாயம்** |
| **Village** | : | **கோடாங்கிபட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **44** |
| | | | **Dated** | : | **12.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1, 2 மற்றும் 4 எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 7 (பட்டியல் சாட்சி 13), **திரு. மகேந்திரன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பாக நான் டவுன் பஸ்ஸில் பயணம் செய்தபோது, பயணம் செய்தவர்கள் சண்டை போட்டார்கள். யார் யார் சண்டை போட்டார்கள் என்று எனக்குத் தெரியாது. போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்து வரைபடம் வரைந்தார்கள். அதில் என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

நான் கையொப்பம் செய்த பார்வை மகஜரை படித்துப் பார்த்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று கேட்டால், 15 ஆண்டுகள் ஆனதால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொன்னவாறு சொன்ன இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றும், நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court on 12.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.02.12 17:31:54 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 381/2025**
**Prosecution Witness : 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சவுந்தரராஜ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. சுப்பையா** | **Calling** | : | **சிறப்பு சார்பு ஆய்வாளர் (பணி ஓய்வு )** |
| **Village** | : | **கோவிந்தாபுரம்** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **72** |
| | | | **Dated** | : | **12.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**1, 2 மற்றும் 4 எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 8 (பட்டியல் சாட்சி 19), **திரு. சவுந்தரராஜ்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :-**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். சம்பவ காலத்தில் நான் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணி புரிந்தேன். கடந்த 21.08.2010ம் தேதி நான் செம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளர் பொறுப்பு பணியில் இருந்தேன். அன்றைய தினம் காலை 03.00 மணிக்கு திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலைப் பெற்று, மேற்படி மருத்துவமனை சென்று காலை 04.00 மணிக்கு ராஜாராம், த/பெ. பழனிச்சாமி என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவைப் பெற்று, 05.00 மணிக்கு நிலையம் வந்து நிலையக் குற்ற எண். 325/2010, பிரிவுகள் 307 இ.த.ச. ஆக முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி புகார் மனுவை நீதிமன்றத்திற்கும், அதன் பிரதிகளை மேல் அதிகாரிக்கும் மேற்கொண்டு விசாரணைக்காக அனுப்பி வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

21.08.2010 ம் தேதி எனக்கு மருத்துவமனையில் இருந்து காலை 03.00 க்கு எனக்கு தகவல் வருவதற்கு முன்பாக, எனக்கோ, செம்பட்டி காவல் நிலையத்திற்கு இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக எந்த தகவலும் தெரியாது என்றால் சரிதான். புகார் மனுவை நான் போகும்பொழுதே ராஜாராம் எழுதி வைத்திருந்தார் என்றால் சரிதான். அதை யார் எழுதினார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். புகார் மனுவைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது தவிர, வேறு எந்த விபரமும் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். புகார் மனுவைக்கொடுத்த ராஜாராம் பேசக்கூடிய நிலையில் தான் இருந்தார் என்றால் சரிதான். அவருக்கு இருந்த காயங்களை பற்றி அப்போது சிகிச்சை அளித்த மருத்துவரிடம் நான் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். நான் முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 12.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.02.12 17:32:02 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.